243—

ரெட்டியார் சத்திரத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்துதல்

** 21253*—**திரு. எஸ். எம். துரை :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ரெட்டியார் சத்திரம் கிராமத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம் என்று இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக உள்ளது. அதைச் சுற்றி, இடையப்பட்டி, கதிரையான்குளம், முத்தனம்பட்டி, குட்டத்துப்பட்டி, பளக்கணத்து, மூலச்சத்திரம், குத்தட்டை ஆவரம்பட்டி போன்ற பல கிராமங்கள் இருக்கின்றன. அவற்றைச் சுற்றி, பல குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்த மக்களுக்கு எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத காரணத்தால், திண்டுக்கல் பக்கத்தில் உள்ள மாவட்ட ஆஸ்பத்திரிக்கு 24 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் கன்னிவாடி, ஸ்ரீராம்புரம் 18 கிலோ மீட்டர் இருக்கிறது. ஆகையினால், அவர்களுக்கு எல்லாம் வசதிகள் செய்வதற்காக நமது அரசு உடனடியாக அந்த இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒன்றியத்திலே இப்போது 1,06,000 மக்கட்தொகை இருக்கிறது. இப்போது ஏற்கெனவே 3 இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. எனவே இப்போது முடியாது. எனவேதான் தற்போது ஆய்விலே இல்லை என்று சொன்னேன். எதிர்காலத்திலே இது பற்றி ஆய்வு செய்யப்படும்.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலேயிருந்தாவது ஒரு பகுதி நேர ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அந்தப் பகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக ஆரம்பிப்பதைப் பொறுத்தவரை, 30,000 மக்கட்தொகை இருந்தாலொழிய நாம் செய்ய முடியாது. எனவே அந்தந்த ஒன்றியத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு நாம் கணக்கிடுகிறோம். அந்த ஒன்றியத்திலே 90,000 மக்கட்தொகை இருந்தால் 3 தான் இருக்கும். எனவே 1,20,000 என்று வருகின்றபோது கூடுதலாக இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் கொடுக்கமுடியும். எனவே இதுதான் நிலை. இந்த அளவிலேதான் செய்யமுடியும். அரசாங்கத்தினுடைய நிதிநிலைமையிலே இதற்கு மேலே செய்வதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 244,245 மற்றும் 246. மாண்புமிகு போக்குவரத்துத்துறை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 247. திரு. கா. பூ. முனுசாமி. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

247—

தர்மபுரி மாவட்டத்தில் பட்டு முட்டைகள் விநியோகித்தல்

*14497—திரு கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பில் தனியாருக்கு போதிய பட்டு முட்டைகள் விநியோகிக்க பட்டு முட்டை விந்தகங்கள் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.